1999 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு 30-7-1998-ல் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த நீதிமன்றத்தைத் தொடங்குவதற்கு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இப்போது இருக்கின்ற இடத்திலேயே அந்த நீதிமன்றம் செயல்படவேண்டுமென்ற சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. மேலும், அங்கே போதுமான இடம் இல்லை என்ற தகவலும் அரசிடம் இருக்கிறது. புதிய இடம் கிடைத்த பிறகுதான், நீதிமன்றக் கட்டடத்தைக் கட்ட முடியும். என்றாலும், மாவட்ட நீதிமன்றம் தொடங்குவது குறித்து ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 155, திரு. கோ. தளபதி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

155—

பேரையூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்

***11501—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் வீட்டுவசதித் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கோ. தளபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரையூர் நகரம் என்பது ஒரு வட்டத் தலைமையிடமாக இருப்பதாலும், அங்கு பல புதிய அலுவலகங்கள் ஏற்பட்டு இருப்பதாலும், புதிதாகக் குடிவரக்கூடியவர்களுக்கு வீட்டுவசதி இல்லாத நிலைமை இருப்பதாலும்,

சுமார் 30 கி.மீ. சுற்றளவிற்குக் கிராமங்களாக இருப்பதாலும், பேரையூரிலே குறைந்த அளவு எண்ணிக்கையிலேயாவது வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மற்றும் கோட்டத் தலைமையிடங்களில் மட்டும்தான் வாடகை வீடுகள் கட்டப்படும் என்பது கொள்கை. அதுவும் அரசு நிலங்கள் கிடைக்கப்பெற்றால்தான், அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 156, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

156—

சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***21259—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம தொகுதி, செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை தெற்கு பதிவு மாவட்டம், தெக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தற்போது அரசுக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதுமில்லை.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சார்பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. இதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் வேண்டுமென்றபோதுகூட, 5 Cent இடத்தை இதற்காக ஒதுக்கி நீண்ட நாட்களாகியும்கூட, இன்னும் சொந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருந்து வருகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மிக விரைவில் அந்த அலுவலகத்திற்கு